1993 பிப்ரவரி 12]

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் கலைக் கல்லூரியானது பட்டப் படிப்பு வகுப்புகளைக் கொண்டு நடைபெற்று வருகின்றது. அந்தக் கல்லூரி கடந்த சில ஆண்டுகளாக சரியாக நடைபெறாமலிருந்து, நாம் சில நடவடிக்கைகளை எடுத்து, இப்போது பரவாயில்லை என்ற நிலைமை வந்திருக்கின்றது. அதில் இருக்கிற வகுப்புகள் நல்ல முறையில் நடைபெறுகின்றன என்ற நிலைமை வந்ததற்குப் பிறகு பட்ட மேற்படிப்பு தொடங்குவது பற்றி நாம் பரிசீலனை செய்யலாம்.

டாக்டர். எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதியில் அடிக்கடி ஜாதிக் கலவரங்கள் ஏற்பட்டு கல்லூரி அடைத்துக் கிடக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். இங்கே பட்ட மேற்படிப்பு தொடங்கப்பட்டால் இந்தப் பகுதி வாழ் மக்களின் முன்னேற்றம் கருதி செய்தால், இவ்வாறு இருக்கிற பிரச்சினைகளை எல்லாம் தீர்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே நிதி பற்றாக்குறை இருக்கிற இந்தக் கட்டத்தில் புதிய கல்லூரி தொடங்க வாய்ப்பு இல்லாத காரணத்தால், இருக்கிற ஆசிரியர்களை வைத்து அரசுக்கு அதிகச் செலவு இல்லாமல் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில், எம்.ஏ., (தமிழ்), எம். ஏ., (ஆங்கிலம்), எம். காம்., போன்ற வகுப்புகளைத் தொடங்க அரசு உடனடியாக முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ட மேற்படிப்பு என்று ஒரு வகுப்பைத் தொடங்கினாலே கூடுதல் செலவுக்கு இடம் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, செலவைப்பற்றி நாம் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, அரசின் நிதிநிலையில வருகிற நிதிநிலை அறிக்கையில், எந்த அளவுக்கு பணம் ஒதுக்கப்படுகிறதோ அந்த அடிப்படையில் இதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தளைவர்: வினா எண். 67, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

67—

Approval by Pollution Control Board for New Industries

* 9166 Tmt. K. Mariaulasia :

Will the Hon the Minister for Health be pleased to state ;

(a) Whether the Government propose to make it obligatory on the part of industry for opening new units and for expansion of the existing units in this State to get a clearance from the Pollution Control Boards in the State and Centre ; and

(b) if so, the details thereof;

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம், இது குறித்த ஆணை அமலில் உள்ளது.

(ஆ) வெவ்வேறு தொழிற்சாலைகளுக்கும் அதன் விவரங்கள் வேறுபடும்.

முற்பகல் 10.20

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்துறையில், தமிழகம் இந்தியா விலேயே முதல் மாநிலமாக விளங்கவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் செயலாற்றி வருகின்ற நமது தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், இதுபற்றி அமலில் இருக்கப் போவதாக அறிவித்துள்ளார்கள். நன்றி. இதைப் போல தமிழகத்தில் மற்ற மாவட்டங்களிலே இந்த மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தை தனித் தனியாக அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் தனித் தனியாக இதற்கு என்று தலைமை அலுவலகத்தை அமைக்க முடியாது. ஏற்கனவே, அதற்கான பொறியாளர்கள் அந்தந்த மாவட்டங்களிலே இருக்கிறார்கள். அந்தப் பொறியாளர்கள் மூலமாகத்தான் இந்தப் பணி இப்போது நடந்து வருகிறது. எனவே, இப்போது இருக்கின்ற அமைப்பே அதற்குப் போதுமானதாக அந்தப் பணியை முழுவதுமாக செய்வதற்குத் தகுதி உடையதாக இருக்கின்ற காரணத்தால், அதை மேலும் விரிவாக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று கருதுகிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை வைத்து, திருச்சி மாவட்டத்திலே இருக்கின்ற நிலையைப் பார்த்து, அதற்கு ஏதாவது கூடுதலாக தேவை என்றால், அவசியம் இருந்தால் மட்டும் அதுபற்றி ஆலோசனை செய்யப்படும்.

1993 பிப்ரவரி 12]

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தை அனைத்து மாவட்டங்களிலும் செயல் படுத்த முடியவில்லை என்றாலும் முக்கியமாக தொழிற் சாலைகள் அதிகமாக இருக்கின்ற மாவட்டங்களில் மட்டு மாவது, அந்த அலுவலகத்தை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமை அலுவலத்தைத்தான் ஆங்காங்கே அமைக்க முடியாது என்று சொன்னேன். ஆனால், அந்தந்த மாவட்டங்களிலே அதற்கான அலுவலர் கள் பணியாற்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்கான அலுவலகம் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக அதிகமாக தொழிற்சாலைகள் இருக்கின்ற இடத்திலே பணி யாளர்கள் கூட அதிகமான எண்ணிக்கையிலே இருக் கிறார்கள். எனவே, தற்போதிருக்கிற சூழ்நிலையே சரியாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பால கங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மாசை உண்டாக்காத தொழிற்சாலை களாக இருந்தும், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய "நோ அப்ஜக்சன் சர்ட்டிபிக்கேட்டை" வாங்கவேண்டும் என்ற கட்டாயமான சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதற்கு விலக்கு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே எந்தந்த தொழிற்சாலை கள் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திலே அனுமதியை பெறவேண்டும் என்று ஒரு வழிவகை செய்யப்பட்டு இருக் கிறது. அதன்படி, மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. மிக அதிகமாக மாசை ஏற்படுத்தக் கூடியது, மாசை அதிகமாக ஏற்படுத்தாத நடுநிலையில் இருப்பது, மாசையே ஏற்படுத்தாது இருக்கிற தொழிற்சாலை. இப்படி மூன்று விதமாகப்பிரிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அந்த வகை யிலேதான் அனுமதியைக் கொடுத்துக் கொண்டு இருக் கிறோம். அந்த முறை தொடர்ந்து இருக்கவேண்டும். காரணம், குறிப்பாக பல இடங்களிலே வேறு ஒரு தொழிலைச் சொல்லி, அவர்கள் சான்றிதழைப் பெற்று விட்டு, அதற்குப் பின்னாலே மாசை ஏற்படுத்தக்கூடிய நிலையை உருவாக்கிவிடுகிறார்கள். எனவே, இப்போது இருக்கிற நிலையிலேயிருந்து மாற்றுவதற்கு வாய்ப்பில்லை.